புளொட்டிலிருந்து தீப்பொறி வரையான எனது அனுபவப் பகிர்வுகள் - பகுதி **17**

Written by தமிழரங்கம்
Friday, 12 August 2011 18:45 - Last Updated Friday, 12 August 2011 19:05

முதன்முதலாக புளொட்டுக்குள் ஸ்தாபன கோட்பாடு அறிமுகம் :

ஸ்தாபன கட்டுப்பாடுகள் மூலம் இயக்க நடவடிக்கைகளை ஒழுங்குக்குள் கொண்டுவர டொமினிக் நடவடிக்கை !!

புளொட்டின் தள இராணுவப் பொறுப்பாளர் ரமணனும் யாழ் மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் சின்னமெண்டிஸும் தளநிர்வாகத்துடனும் மக்கள் அமைப்பினருடனும் முரண்பட்டு நின்றதால் சின்னமெண்டிஸை யாழ் மாவட்ட அமைப்புக் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு தளநிர்வாகப் பொறுப்பாளர் டொமினிக்கால் கேட்டுக்கொள்ளப்பட்டு யாழ் மாவட்ட அமைப்புக் குழுக் கூட்டங்களில் சின்னமெண்டிஸ் கலந்துகொண்டிருந்தபோதும் கூட அவர்களது செயற்பாடுகளில் எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை. யாழ் மாவட்ட அமைப்புக் குழுக் கூட்டங்களில் தனது கருத்துக்களையோ அல்லது அபிப்பிராயங்களையோ தெரிவிக்காமலே ஒரு பார்வையாளர் போல் கலந்துகொள்ளும் சின்னமெண்டிஸ் வழமைபோல் தளநிர்வாகத்துடனும் மக்களமைப்புடனும் முரண்பாடான போக்கைக் கொண்டவராகவே காணப்பட்டார்.

தளம் வந்திருந்த படைத்துறைச் செயலர் கண்ணன் தொடர்ச்சியாக புகைபிடிக்கும் பழக்கத்தைக் கொண்டவராகக் காணப்பட்டார். படைத்துறைச் செயலர் கண்ணனைத் தொடர்ந்து தளம் வந்திருந்த சின்னமெண்டிஸ் உட்பட இராணுவப் பிரிவைச் சேர்ந்தவர்களில் ஒரு பகுதியினரும் கூட தொடர்ச்சியாக புகைப்பிடிக்கும் பழக்கத்தைக் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். இதனால் படைத்துறைச் செயலர் கண்ணன் மக்கள் அமைப்பில் செயற்பட்டவர்களிடமிருந்து புகைப்பிடித்தல் பற்றிய விமர்சனத்தை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

1 / 2

Written by தமிழரங்கம்
Friday, 12 August 2011 18:45 - Last Updated Friday, 12 August 2011 19:05

[redacted]